අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
Ministry of Education

'ඉසුරුපාය', බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව.
'இசுருபாய', பத்தரமுல்லை, இலங்கை.
'Isurupaya', Battaramulla, Sri Lanka.
+94112785141-50 +94112784846
isurupaya@moe.gov.lk www.moe.gov.lk

මගේ අංකය / எனது இல. / My Ref. ED/01/101/02/02/01 ඔබේ අංකය / உமது இல. / Your Ref.

දිනය / திகதி / Date 2024.05.18

**அமைச்சு சுற்றுநிருபம் : 13/2024**

சகல மாகாணக் கல்விச் செயலாளர்கள்,
சகல மாகாணக் கல்விப் பணிப்பாளர்கள்,
சகல வலயக் கல்விப் பணிப்பாளர்கள்,
சகல கோட்டக் கல்விப் பணிப்பாளர்கள்
சகல மாகாண/வலயக கணித பாடத்திற்கு பொறுப்பான பிரதி/உதவி கல்விப் பணிப்பாளர்கள்
சகல பிரிவெனாக்களின் பிரிவெனாதிபதி தேர்கள்இ,
சகல அதிபர்களுக்கும்.

**அகில இலங்கை கணித அறிவுப் போட்டி**

கல்வி அமைச்சின் கணிதக் கிளையினால் வருடாந்தம் செயற்படுத்தப்படும் அகில இலங்கை கணித அறிவுப் போட்டியை நடத்துவது தொடர்பாக இதற்கு முன்னர் வெளியிடப்பட்ட இலக்கம் 36/2018 மற்றும் அதன் திருத்தப்பட்ட இலக்கம் 36/2018(I) கொண்ட அகில இலங்கை கணித அறிவுப் போட்டி தொடர்பான சுற்றுநிருபங்கள் இத்துடன் ரத்துச் செய்யப்படுவதுடன் 2024 ஆம் வருடத்திலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் அகில இலங்கை கணித அறிவுப் போட்டிகள் இந்த சுற்றுநிருபத்தின் விதிமுறைகளுக்கு ஏற்புடைய விதத்தில் நடாத்தப்பட வேண்டும்.

அகில இலங்கை மட்டப் போட்டிகள் நடத்தப்படும் விதம் மற்றும் பாடசாலைகள், பிரிவெனாக்கள், கோட்டங்கள், வலய மற்றும் மாகாண மட்டத்தில் போட்டிகள் நடத்தப்பட்ட பின்னர் ஒவ்வொரு போட்டி நிகழ்ச்சிகள் தொடர்பாக மாகாணத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் மாணவர் குழுவை அதில் பங்குபற்ற வைக்கும் விதம் தொடர்பாக இந்த சுற்றறிக்கையின் ஆலோசனைகள் பின்பற்றப்பட வேண்டும்.

**1.0 அகில இலங்கை கணித அறிவுப் போட்டி அறிமுகம்.**

கல்வி அமைச்சின் கணிதப் கிளையினால் 2011ஆம் ஆண்டிலிருந்து கீழ் குறிப்பிடப்படும் இலக்குகளை அடைவதற்காக நாட்டிலுள்ள அனைத்து அரச பாடசாலைகளில் கணித பாடத்தைக் கற்கும் 6,7,8,9,10 தரங்களின் மாணவ மாணவியர்களை இலக்காகக் கொண்டு இந்த கணித அறிவுப் போட்டி நடாத்தப்பட்டது. 2017 ஆம் ஆண்டில் அதற்கு மேலதிகமாக தேசிய மட்டத்தில் மாத்திரம் அரச பாடசாலைகளில் 12,13 ஆம் தரங்களிலுள்ள மாணவர்கள் மற்றும் கல்விப் பிரிவெனாக்களில் 9,10ஆம் தரங்களிலுள்ள மாணவர்கள் பங்குபற்றும் வகையில் கணித அறிவுப் போட்டியொன்று நடாத்தப்பட்டது. 2018 ஆம் ஆண்டில் இச் சகல

குழுக்களுக்கும் அகில இலங்கை கணித அறிவுப் போட்டி ஒன்றுக்கொன்று வேறுபட்ட 4 கட்டங்களாக போட்டிகளை நடாத்த நடவடிக்கை எடுக்கப்பட்டது.

### 1.1 அகில இலங்கை கணித அறிவுப் போட்டியின் விசேட குறிக்கோள்கள்

1. கணித விடய அறிவு தொடர்பாக ஆசிரியர் மற்றும் மாணவர் இருசாரரின் அறிவுக் கிளர்வை ஏற்படுத்துவதன் மூலம் அறிவு மற்றும் திறனை விருத்தி செய்தல்.
2. மாணவர்கள் மத்தியில் காணப்படும் கணித விடயம் தொடர்பான இயலுமையை வெளிக்கொணர்வதற்கு மற்றும் மதிப்பிடுவதற்கு சந்தர்ப்பங்களை ஏற்படுத்துவதன் மூலமாக அவர்களுடைய பிரயோகத் திறன்களை வெளிப்படுத்தல்
3. மீத்திறன் மாணவர்களை இனங்கண்டு தேசிய மற்றும் சர்வதேச மட்டத்தில் அவர்களுக்கு கணிதத்துறையில் சிறப்பான இடத்தினையும் கௌரவத்தினையும் பெறும் வகையிலான சாத்தியங்களை விருத்தி செய்தல்.
4. அனைவருக்கும் கணிதம் எனும் கொள்கையினை அடைவதற்கு உகந்தவாறு சகல மாணவர்களுக்கும் கணிதத்தை ஆர்வத்துடன் கற்பதற்கு சந்தர்ப்பங்களை வழங்குதல்

### 2.0 அகில இலங்கை கணித அறிவுப் போட்டிக்கான ஆலோசனைகளும் பொது ஒழுங்கு முறைகளும்

அகில இலங்கை கணித அறிவுப் போட்டித் தொடர் பற்றிய பொதுவான ஆலோசனைகள் மற்றும் செயன்முறைகள் 2.1 இன் கீழ் விரிவாக காட்டப்பட்டுள்ளன.

**அகில இலங்கை கணித அறிவுப் போட்டி (தேசிய மட்ட)** போட்டிகள் நடாத்தப்படும் இடம் மற்றும் திகதிகள் கல்வி அமைச்சின் கணிதப் பிரிவின் மூலமாக தீர்மானிக்கப்படும். அதற்குரிய விபரங்கள் மற்றும் ஆலோசனைகள் அகில இலங்கை கணித அறிவுப் போட்டிகள் தொடங்கும் தினத்திற்கு <u>நான்கு மாதங்களுக்கு முன்னதாக</u> அறிவிக்கப்படும்.

### 2.1 பொது ஆலோசகைளும் செயன்முறைகளும்.

2.1.1 அகில இலங்கை கணித அறிவுப் போட்டிகள் சிங்களம், தமிழ் மொழி மற்றும் இரு மொழி கல்வி என வேறுபடுத்தாமல் கனிஷ்ட பிரிவு, சிரேஷ்ட பிரிவு 1, சிரேஷ்ட பிரிவு 2, மற்றும் பிரிவெனாக்கள் பிரிவு என்ற நான்கு பிரிவுகளில் ஒரு பிரிவில் ஒரு குழு வீதம் ஒரு மாகாணத்துக்கு நான்கு பிரிவுகள் முன்னிலைப்படுத்தப்பட வேண்டும்.

2.1.2 அனைத்து போட்டி நிகழ்ச்சிகளுக்கும் மாகாண மட்டத்தில் அட்டவணை 1 இற்கமைவாக குழுவொன்றை முன்னிலைப் படுத்தலாம்.

2.1.3 அனைத்து போட்டி நிகழ்ச்சிகள் தொடர்பாகவும் மாகாணத்தை பிரதிநிதித்துவப் படுத்தும் குழுக்கள் மாகாண கணித பாட இணைப்பு உத்தியோகத்தரின் முழு கண்காணிப்பில் மற்றும் பொறுப்பேற்றலின் கீழ் அகில இலங்கை கணித அறிவுப் போட்டியில் பங்கேற்பது கட்டாயமாகும்.

2.1.4 அகில இலங்கை மட்டத்திற்கு முன்னிலைப்படுத்தும் குழுக்களை தெரிவு செய்வதற்காக குறித்த மாகாணத்திற்குள் இப்போட்டிகளின் **குறிக்கோள்களுக்கு பொருந்தும் வகையில்** கோட்ட, வலய மற்றும் மாகாண மட்டத்தில் போட்டிகளை ஒழுங்கமைக்க வேண்டும். அதற்காக கோட்ட, வலய மட்ட போட்டிகளை முதலில் நடாத்தி அதில் வெற்றி பெறும் குழுக்களை மாகாண மட்ட போட்டிக்காக முன்னிலைப்படுத்தல் வேண்டும்.

2.1.5. இதற்கமைவான சகல கோட்ட, வலய போட்டிகள் வலய கணித பாடத்திற்கு பொறுப்பான அதிகாரியினாலும், மாகாணப் போட்டிகள் மாகாண கணித பாட இணைப்பு அதிகாரியினாலும் ஒழுங்கமைக்கப்பட வேண்டும். போட்டியின் இலக்குகளை அடைவதற்காக வலயத்திலுள்ள கூடுதலான பாடசாலைகளை போட்டியில் பங்குபற்றச் செய்வதற்கு வலய கணித பாடத்திற்குப் பொறுப்பான அதிகாரி செயற்பட வேண்டும். அவ்வாறு வலயத்தினால் இனங்காணப்படும் பாடசாலைகளின் போட்டிக் குழுக்களை பயிற்றுவித்து முன்னிலைப் படுத்தும் முழு பொறுப்பு பாடசாலை அதிபர்களை சார்ந்ததோடு அதற்குறிய ஆலோசனைகள் கணித ஆசிரிய ஆலோசகர்களினால் வழங்கப்பட வேண்டும்.

2.1.6. கனிஷ்ட, சிரேஷ்ட 1, சிரேஷ்ட 2 பிரிவுகள் மற்றும் பிரிவெனாக்களிலிருந்து மாகாணத்தைப் பிரநிதித்துவப்படுத்தும் குழுக்கள் மாகாண கணித பாட இணைப்பு அதிகாரிகளினால் ஒழுங்கமைக்கப்பட வேண்டும். போட்டித் இலக்குகளை அடைவதற்காக மாகாணத்தில் அதிகபடியான பாடசாலைகள் மற்றும் பிரிவெனாக்கள் ஊடாக தேசிய போட்டிகளுக்கு மாணவர்களை முன்னிலைப் படுத்துவதற்காக வலய கணித பாடத்திற்குப் பொறுப்பான உத்தியோகத்தர் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். அவ்வாறு வலயத்தினால் இனங்காணப்பட்ட பாடசாலைகள் மற்றும் பிரிவெனாக்களின் மாணவர்களை பயிற்றுவித்து முன்னிலைப் படுத்தும் முழுப்பொறுப்பு பாடசாலை அதிபர்கள் மற்றும் பிரிவெனாக்களின் பிரிவெனாதிபதிகளைச் சார்வதுடன் அவற்றுக்குரிய ஆலோசனைகள் கணித ஆசிரிய ஆலோசகர்களினால் வழங்கப்பட வேண்டும். பிரிவெனாக்களிலிருந்து வலய, மாகாண போட்டிகளுக்கு மாணவர்களை தெரிவுசெய்தல், போட்டிகளை நடாத்துதல் மாகாண கணிதபாட இணைப்பாளரின் கண்காணிப்பின் கீழ் மாகாண பிரிவெனா இணைப்பாளர் மூலம் வலய கணிதபாட இணைப்பாளருடன் இணைந்து ஒழுங்கமைக்கப்பட வேண்டியதுடன் தேசிய மட்ட போட்டிக்கு குழுக்களை பயிற்றுவித்து முன்னிலைப்படுத்தும் பொறுப்பு மாகாண கணித விடயத்திற்குப் பொறுப்பான ஒழுங்கிணைப்பு அதிகாரி மற்றும் பிரிவெனாக்களில் உரிய மாகாண பிரிவெனா கணித விடய ஒருங்கிணைப்பு அதிகாரி ஆகிய இருவரின் பூரண கண்காணிப்பில் மற்றும் பொறுப்பேற்றலின் கீழ் நடைபெற வேண்டும்.

2.1.7. கோட்ட, வலய போட்டிகள் வலயக் கல்விப் பணிபாளரினதும் மாகாண போட்டிகள் மாகாண கல்விப் பணிப்பாளரினதும் பூரண கண்காணிப்பின் கீழ் கல்வி அமைச்சினால் நிர்ணயிக்கப்பட்ட காலத்திற்குள் நடாத்தி முடிக்க வேண்டும்.

**(அட்டவணை இலக்கம் 2 - அகில இலங்கை கணித அறிவு குறித்த காலசட்டகம்)**

2.1.8 கோட்ட, வலய மற்றும் மாகாண மட்டத்தின் அனைத்து போட்டி முடிவுகளும் அப்போட்டிகள் நடக்கும் தினத்திலேயே வெளியிடப்பட வேண்டும். பெற்றுக்கொள்ளப்பட்ட அனைத்து முடிவுகளைக் கொண்ட அறிக்கையுடன் ஒவ்வொரு போட்டியிலும் முதலிடத்தைப் பெற்ற குழுக்கள் தொடர்பான விபரங்கள், பாடசாலையின் பெயர் அல்லது பிரிவெனாவின் பெயர், முகவரி கோட்டம், வலயம் போன்றவற்றை தெளிவாக எழுதி வலய போட்டி நடைபெற்று முடிந்தவுடன் வலய கல்விப் பணிப்பாளரினால் மாகாண கல்வி பணிப்பாளருக்கு அனுப்பப்படல் வேண்டும்.

2.1.9 நடுவர்கள் குழாம் கணிதத் துறையில் வல்லுநர்களைக் கொண்டு அமைக்கப்பட வேண்டும். நடுவர்களினால் வழங்கப்படும் தீர்ப்புகள் எவ்விததத்திலும் மாற்றப் படலாகாது. ஒவ்வொரு போட்டிகளின் கீழ் தெளிவுபடுத்தப்பட்டுள்ளவாறு எல்லா மட்டத்திலும் அந்தந்த போட்டிகளுக்கான நடுவர்கள் குழாமை தெரிவு செய்ய வேண்டும். கோட்ட மற்றும் வலய மட்டத்திலான போட்டிகளுக்கான நடுவர் குழாமை கணித பாடத்திற்கு பொறுப்பான அதிகாரியினாலும், மாகாண மட்ட போட்டிகளுக்கான நடுவர்களை மாகாண கணித பாடத்திற்கு பொறுப்பான அதிகாரியினாலும் நியமிக்கப்பட வேண்டும்.

2.1.10 மாகாண போட்டிகளின் முடிவில் அகில இலங்கை போட்டிகளில் பங்கேற்கும் குழுக்களைப் பற்றிய விபரங்கள் மற்றும் பரிந்துரைகள் மாகாண கல்விப் பணிப்பாளரினால் **<u>வழங்கப்பட்ட மாதிரிகளுக்கு அமைவாகவே</u>** **(அகில இலங்கை கணித புதிர் போட்டிக்கான மாதிரி படிவம் 1)** பூர்த்தி செய்து உரிய ஆண்டில் கணிதக் கிளையினால் அறிவிக்கப்பட்ட திகதிக்கு முன்பதாக கல்விப் பணிப்பாளர், கணிதக் கிளை, கல்வி அமைச்சு, இசுறுபாய, பத்தரமுல்ல என்ற முகவரிக்கு அனுப்ப வேண்டும். அவ்வாறு சரியாக குறிப்பிட்டத் தினத்தன்று உரிய விபரங்கள் சமர்ப்பிக்கத் தவறும் போட்டிக் குழுக்களுக்கு அகில இலங்கை கணிதப் போட்டியில் கலந்து கொள்ளும் சந்தர்ப்பம் வழங்கப்பட மாட்டாது

## 3.0 அகில இலங்கை கணித அறிவுப் போட்டி நடாத்தப்படும் முறை மற்றும் நிபந்தனைகள்.

### 3.1 போட்டி நிகழ்ச்சிகள்

கனிஷ்ட பிரிவு, சிரேஷ்ட பிரிவு -1, சிரேஷ்ட பிரிவு – 2 மற்றும் பிரிவெனாக்கள் என்றவாறு வேறுவேறாக நான்கு போட்டி நிகழ்ச்சிகள் நடத்தப்படும். ஆனால் சிங்களம், தமிழ், மற்றும் இருமொழி என வேறுபடுத்தப்பட மாட்டாது என்பதுடன் ஏதாவதொரு நிகழ்ச்சியை பிரதிநிதித்துவப்படுத்துவதற்கு மொழிபேதங்கள் இன்றி எந்தவொரு மாணவனுக்கும் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

### 3.2 பங்குபற்றல்

| பிரிவு | போட்டியிடும் குழுவைச் சார்ந்த மாணவர் எண்ணிக்கை | மாணவர் தரங்கள் | ஒவ்வொரு குழுவைச் சார்ந்த மாணவர் எண்ணிக்கை | போட்டியிடும் பதிலீட்டு மாணவர் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| கனிஷ்ட | 6 | 6 | 2 | 1 |
| | | 7 | 2 | 1 |
| | | 8 | 2 | 1 |
| சிரேஷ்ட - I | 6 | 9 | 3 | 1 |
| | | 10 | 3 | 1 |
| சிரேஷ் - II | 6 | 12 | 3 | 1 |
| | | 13 | 3 | 1 |
| பிரிவெனாக்கள் | 6 | 9 | 3 | 1 |
| | | 10 | 3 | 1 |

**அட்டவணை இலக்கம் 01 – ஒவ்வொரு தரத்தின் கீழ் கணிதப் போட்டி நிகழ்ச்சிளுக்காக மாணவர் பங்கேற்றல்**

**சிரேஷ்ட பிரிவு – II பிரிவில் எதிர்வரும் ஆண்டுகளில் க.பொ.த. (உயர் தர) பரீட்சைக்கு முதற் தடவையாகத் தோற்றும் பாடசாலை மாணவர்களே பங்குபற்றத் தகுதி பெறுவர்.**

அகில இலங்கை போட்டிக்கு குழுக்களை முன்னிலைப்படுத்தும்போது உரித்தான மாணவர்கள் உரிய ஆண்டில் அட்டவணை இல 1 இன் பிரகாரம் உரிய தரத்தில் கற்பவர்கள் என்பதனை உரிய அதிபர் அல்லது பிரிவேனாதிபதியினால் உறுதி செய்தல் வேண்டும். அந்த சான்றிதழோடு பதிலீட்டு மாணவன் உட்பட போட்டியில் கலந்துகொள்கின்ற குழுக்களுக்கு உரித்தான மாணவர்களுடைய பெயர் பட்டியல் மாகாண கணித இணைப்பு உத்தியோகத்தரின் பதவி முத்திரை மற்றும் ஒப்பத்துடன் போட்டிகள் ஆரம்பிப்பதற்கு முன்னர் பதிவு செய்யும் சந்தர்ப்பத்தில் ஒப்படைப்பதின் ஊடாக போட்டிகளுக்கு பங்கேற்பவர்கள் 2.1.10 பிரிவின் ஆலோசனைப்படி மாகாணத்தினால் சிபாரிசு செய்யப்பட்ட குழுக்களாக உறுதி

செய்யப்படல் வேண்டும். ஒரு குழுவின் சிபாரிசு செய்யப்பட்ட பெயர் பட்டியல் நடுவர் குழாமினால் ஏற்றுக்கொள்ளப்படுகின்ற நியாயமான தவிர்க்க முடியாத காரணத்தின் பேரில் மாற்ற வேண்டிய சந்தர்ப்பங்களில் அது தொடர்பாகவும் மேற்படி விடயத்தினை உறுதிசெய்தல் வேண்டும்.

### 3.1 தேசிய மட்ட போட்டி நடைபெறும் முறை மற்றும் உரிய நிபந்தனைகள்

### 3.3.1 போட்டிகள் நடாத்தப்படுகின்ற முறைமை மற்றும் புள்ளிகள் வழங்கப்படுகின்ற நடைமுறை

அகில இலங்கை கணித அறிவுப் போட்டியில் தேசிய மட்டத்திலான போட்டிகள் நான்கு கட்டங்கள் கொண்டவையாக காணப்படும். அதன் ஒவ்வொரு கட்டமும் நடைபெறும் விதம் பின்வருமாறு காட்டப்படும். முதலாம், இரண்டாம் மூன்றாம் கட்டப் போட்டிகள் முதல் மூன்று மணித்தியாலங்களுக்குள் ஒரே தடவையில் இடம்பெறும். நான்காவது கட்டம் தவிர்ந்த ஏனைய சகல கட்டங்கள் தொடர்பாக மாகாணத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற குழுவிற்கு உரித்தான பதிலீட்டு மாணவர்களும் கலந்து கொள்ளலாம். சீட்டிழுப்பின் மூலம் மாகாணக் குழுக்களுக்கு 1 தொடக்கம் 9 வரையிலான எண்கள் வழங்கப்படுவதுடன் அவ்வெண்களின் படியே போட்டிகளில் பங்கேற்பு இடம்பெறும். அனைத்து போட்டிகளும் மூன்று மாகாணங்களின் பங்கேற்புடன் நடைபெறும்.

முதலாவது மணித்தியாலத்தில் 1,2,3 குழுக்கள் முதலாம் கட்டப் போட்டியிலும் 4,5,6 குழுக்கள் இரண்டாம் கடடப் போட்டியிலும், 7,8.9 குழுக்கள் மூன்றாம் கட்டப் போட்டியிலும் பங்கேற்க வேண்டும். இரண்டாம் மணித்தியாலத்தில் 1,2,3 குழுக்கள் இரண்டாம் கட்டப் போட்டியிலும், 4,5,6 குழுக்கள் மூன்றாம் கட்டப்போட்டியிலும், 7,8.9 குழுக்கள் முதலாம் கட்டப்போட்டியிலும் பங்கேற்க வேண்டும். மூன்றாம் மணித்தியாலத்தில் 1,2,3 குழுக்கள் மூன்றாம் கட்டப்போட்டியிலும், 4,5,6. குழுக்கள் முதலாம் கட்டப் போட்டியிலும் 7,8,9 குழுக்கள் இரண்டாம் கட்டப் போட்டியிலும் பங்கேற்க வேண்டும். நடுவர் குழாமின் தீர்ப்பு இறுதி தீர்ப்பாகும். போட்டி நிகழ்ச்சிளுக்கு ஏற்புடையவாறு நடுவர் குழாமின் எண்ணிக்கை வேறுபட இடமுண்டு.

போட்டி கட்டங்கள் பின்வருமாறு இடம்பெறுவதுடன் கட்டம் 01,02 மற்றும் 03 போன்றவை சிங்கள மற்றும் தமிழ் மொழி மூலங்களிலும் 04 ஆம் கட்ட போட்டி சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூலங்களில் நடாத்தப்படும்.

#### போட்டிக் கட்டம் 1 (Maths Trail)

- முதலாவது கட்டப் போட்டிகள் முதலாவது மணித்தியாளத்தினுள் திறந்த வெளியில் நடாத்தப்படுகின்ற குழு செயற்பாடு ஊடாக இடம்பெறும். ஒரு செய்றபாடு 15 நிமிட காலத்தினுள் முற்றுப்பெறுதல் வேண்டும். அந்த போட்டி நிகழ்ச்சிகள் ஒரு மணித்தியாலயத்தில் இவ்வாறான செயன்முறைகள் 3 நிறைவு செய்யப்படுதல் வேண்டும். இதற்கு புள்ளிகள் குழுவுக்கு உரித்தாகும்.

**போட்டிக் கட்டம் 2 (Maths Puzzle)**

- இந்த போட்டிகள் ஒருமணித்தியால நேரத்தினுள் நடாத்தப்படும். இதில் ஒரு குழுவுக்கு புதிர்கள் இரண்டோ அல்லது மூன்றோ வழங்கப்படும். குழுக்களின் உறுப்பினர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து புதிர்க்கான விடைகளை தேடவேண்டும். குழுக்களுக்காக புள்ளிகள் வழங்கப்படும்.

**போட்டி கட்டம் 3 (Team Contest)**

- இந்த போட்டி ஒரு மணித்தியால காலத்தினுள் இடம்பெறுவதுடன் குழுக்களாக இணைந்து கணிதம்சார் பிரச்சினைகள் பலவற்றுக்கு தீர்வை காணல் வேண்டும். இதில் குழுக்களாக திட்டமிடுதல் பங்கேற்றல் மற்றும் விடைகள் என்பவற்றிற்கு புள்ளிகள் வழங்கப்படும்.

**போட்டி கட்டம் 4 (Maths Quiz)**

- இந்த போட்டி 90 நிமிடங்களினுள் இடம்பெறுவதுடன் இரு சுற்றுக்கள் இடம்பெறும் இந்த போட்டியில் குழுவில் உள்ள ஆறு பேருக்கு மாத்திரமே பங்குபற்ற முடியும். ஏனையவர்கள் மேலதிக போட்டியாளர்களாவர். ஒரு போட்டியாளருக்கு ஒரு சுற்றில் ஒரு வினா வீதம் இரு சுற்றுக்கள் நடைபெறும். ஒரு போட்டிக்கு மூன்று அணிகள் வீதம் மூன்று இடங்களில் இடம்பெறும்.

- போட்டிக்காக குழுக்களின் பிள்ளைகள் சிறிய வகுப்பிலிருந்து பெரிய வகுப்பு வரை ஒழுங்குமுறையில் அமரச்செய்யப்படுவர். வினாக்கள் சிறிய வகுப்பிலிருந்து பெரிய வகுப்பு வரை என்ற ஒழுங்கிலேயே வினவப்படும்.

- ஒவ்வொரு தரத்திற்கும் பொருந்தும் விதத்தில் ஒரு சுற்றில் ஒரு குழுவிற்கு ஆறு வினாக்கள் வீதம் முன்வைக்கப்படுவதுடன் வினாக்கள் தெரிவுசெய்யப்படுவது குலுக்கல் முறையிலாகும்.
- முதலாவது வினா தொடுக்கப்படும் குழு குலுக்கல் முறையினால் தீர்மானிக்கப்படும்.

- ஒரு வினா ஒரு மொழிமூலம் ஆகக்கூடியது இருதடவைகள் மாத்திரம் வாசிக்கப்படும். (வினா தொடுக்கப்படுபவரின் தேவைக்கேற்ப வினா ஏதேனும் ஒரு மொழியில்) இதற்கு மேலதிகமாக மூன்று மொழிகளிலும் வினாக்கள் காட்சிப்படுத்தப்படும்.

- உரிய போட்டியாளர்களுக்கு விடையளிப்பதற்காக 90 வினாடிகள் வழங்கப்படும். ஆக்காலத்தினுள் இரண்டுமுறை முயற்சிப்பதற்கு அனுமதி வழங்கப்படும். விடைகள் மாத்திரம் அல்லாமல் பிரச்சினைகளை தீர்க்கின்ற முறைமைகளுக்கும் புள்ளிகள் வழங்கப்படும். புள்ளியிடும் முறைமைக்கேற்ப உரிய படிமுறைகள் முன்வைப்பதன் பேரில் சரியான விண்டகளுக்கு 10 புள்ளிகள் வழங்கப்படும்.

- விடைகள் சரியாகவும் படிமுறைகள் பிழையாகவும் காணப்பட்டால் புள்ளிகள் வழங்கப்படமாட்டாது. எனினும் விடை பிழையாகக்காணப்பட்டு படிமுறைகள் சரியாக காணப்படுமாயின் அப்படிமுறைகளுக்காக புள்ளிகள் வழங்கப்படும். நடுவர் குழாமுக்கு ஏற்றுக்கொள்ளத்தக்கவிதத்தில் சுருக்கமான மற்றும் சரியான முறைமைகளுக்காகவும் புள்ளியிடல் முறைமைக்குப் பொருத்தமாக புள்ளிகள் வழங்கப்படும்.

- முதலாவது குழுவின் முதல் போட்டியாளரின் படிமுறை சரியாக இருந்து விடை பிழையெனில் அல்லது படிமுறை மற்றும் விடை பிழையாக இருப்பின் அந்த குழுவில் உரிய தரத்தின் வேறு ஒருவருக்கு அல்லது அதனிலும் கீழ் வகுப்புப் போட்டியாளர் ஒருவருக்கு அவ்வினாவிற்கு விடையளிப்பதற்கு சந்தர்ப்பம் வழங்கப்படும். நேரம் 15 நொடிகளாகும். ஒரு முயற்சிக்கு மட்டும் அனுமதி வழங்கப்படும். இரண்டாம் போட்டியாளரின் உரிய படிமுறை முன்னிலைப் படுத்துவதோடு சரியான விடைக்கு புள்ளி வழங்கும் முறைமையின் படி புள்ளிகள் உரித்தாகும். ஆகக்கூடிய புள்ளியாக 05 புள்ளிகள் வழங்கப்படும்.

- முதலாம் குழுவின் இரண்டாவது போட்டியாளரின் படிமுறை மற்றும் அனைத்து விடைகளும் பிழையாக இருந்தால் வினாவிற்கு விடையளிக்கும் சந்தர்ப்பம் அடுத்த அணிக்கு வழங்கப்பட மாட்டாது.

- கீழ் வகுப்புப் போட்டியாளர் ஒருவருக்கு வழங்கப்படும் வினா தொடர்பாக எந்த சந்தர்ப்பத்திலும் மேல்வகுப்பு போட்டியாளரின் விடை ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. எனினும் மேல்வகுப்பு போட்டியாளர் ஒருவரின் வினாவுக்கு கீழ்வகுப்புப் போட்டியாளர் ஒருவரின் விடை ஏற்றுக்கொள்ளப்படும்.

- மாகாண கணித பாட இணைப்பு உத்தியோகத்தரினால் பெயரிடப்படும் இரண்டு உத்தியோகத்தர்கள் என்ற ரீதியில் போட்டி கண்காணிப்புக்கு பங்குபெறச் செய்ய முடியும்.

### 3.3.2 போட்டியில் கலந்து கொள்வதற்கான நிபந்தனைகள்

- பங்குபற்றுவதற்கமைவான 3.2. பந்திக்கிணங்க உறுதிப்படுத்தப்படும் பெயர் பட்டியலுக்குரிய குழு மாத்திரம் அகில இலங்கை போட்டிக்கு மாகாணம் சார்பாக முன்னிலைப்படுத்தப்பட வேண்டும்.

- போட்டியாளர்கள் பாடசாலை சீருடையில் போட்டியில் பங்கேற்க வேண்டும்.

### 3.3.3 "அகில இலங்கை கணித அறிவுப் போட்டியின் நேர அட்டவணை"

| வலய மட்டம் | மாகாண மட்டம் | அகில இலங்கை மட்டம் |
|---|---|---|
| மே/ ஜுன் | ஜுன் / ஜுலை | செப்டம்பர் / ஒக்டோபர் |

**அட்டவணை இலக்கம் 2 – அகில இலங்கை கணிதப் போட்டிக்கான நேர சட்டகம்**

3.3.4 **அகில இலங்கை கணித அறிவுப்போட்டியின் வெற்றிக்குழுவிற்கான சான்றிதழ் மற்றும் பதக்கம் வழங்கல்**

- போட்டியின் முடிவில் கட்டம் 01 (**Maths Trail**), கட்டம் **02 (Maths Puzzle)**, கட்டம் **03 (Team Contest)** மற்றும், கட்டம் **04 (Maths Quiz)** என்பவற்றில் பெற்றுக்கொண்ட மொத்த புள்ளிகளுக்கு அமைவாக அகில இலங்கை கணித அறிவுப்போட்டியின் முதலாம், இரண்டாம், மூன்றாம் இடங்களை பெற்றுக்கொண்ட குழுக்கள் வெற்றியீட்டிய குழுக்களாக அறிவிக்கப்படும்.

- முதலாம், இரண்டாம், மூன்றாம் இடங்களைப் பெறும் குழுக்களின் பதிலீட்டு மாணவர்கள் உள்ளடங்களாக அனைத்து போட்டியாளர்களுக்கும் ஒரு சான்றிதழ் வீதமும், ஒவ்வொரு குழுவின் வெற்றியை அடையாளப் படுத்தும் விதத்தில் ஒவ்வொரு சின்னமும் அந்த ஒவ்வொரு குழுக்களுக்குரிய வெற்றியின் அடையாளமாக ஒரு குழுவுக்கு ஒரு கேடயம் வீதமும் வழங்கப்படும்.

- போட்டியின் ஒவ்வொரு கட்டம் தொடர்பாகவும் வேறுவேறாக முதலாம், இரண்டாம், மூன்றாம் இடங்களை பெறும் குழுக்களின் மேலதிக மாணவர்கள் உட்பட அனைத்து போட்டியாளர்களுக்கு சான்றிதழ் வீதமும், அந்த ஒவ்வொரு குழுக்கழுக்குரிய வெறறியின் அடையாளமாக பதக்கம் வீதமும் வழங்கப்படும்.

- அகில இலங்கை கணித அறிவுப் போட்டியில் பங்குபற்றி முதலாம், இரண்டாம் மற்றும் மூன்றாம் இடங்களை பெறாத குழுக்களை பிரதிநிதித்துவப் படுத்திய ஏனைய மேலதிக மாணவர்களும் உள்ளடங்களாக சகல போட்டியாளர்களுக்கும் பங்குபற்றியதற்கான சான்றிதழ் வீதம் வழங்கப்படும்.

அகில இலங்கை கணித அறிவுப் போட்டியில் கலந்து கொள்ளும் சகல போட்டியாளர்களும் மற்றும் அதனுடன் தொடர்புடைய ஏனையவர்களும் போட்டியின் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் சுற்றுநிருபத்தில் குறிப்பிடப்பட்ட எல்லாச் சட்ட திட்டங்களையும் கடைபிடிப்பதுடன் நடுவர்களின் தீர்ப்பை இறுதித் தீர்ப்பாக ஏற்றுக் கொள்வதற்கும் இணங்க வேண்டும். அவ்வாரே சுற்றுநிருபத்தில் குறிப்பிடப்பட்டவற்றுள் ஒன்றுக்கோ, ஒன்றுக்கு மேற்பட்டவற்றுக்கோ முரணாக செயற்பட்டுள்ளதாக வெளிவந்தால் போட்டியின் எந்த நிலையில் ஆனாலும் பெறுபேற்று அறிக்கையிலிருந்து அம்மாணவனின் பெயரை நீக்குதல், ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்தல் மற்றும்

ஜே. எம். திலகா ஜயசுந்தர
செயலாளர்